# உங்கள் மனச்சாட்சியை உங்கள் வழிகாட்டியாயிருக்க நீங்கள் அனுமதிக்கலாமா?

"உன் மனச்சாட்சி உனது வழிகாட்டியாய் இருக்கட்டும்" என்ற விளக்கத்தை நாம் அடிக்கடி கேள்விப்படுகின்றோம். ஒருவர் தம் மனச்சாட்சியின் கட்டளைப்படி வாழ்கின்ற வரையிலும் சகலமும் நன்றாய் இருக்கும் என்ற பொதுவான உறுதிப்பாடு மத விஷயத்தில் உண்டு. இந்தப் பாடத்தில் நாம், "உங்கள் மனச்சாட்சியை உங்கள் வழிகாட்டியாயிருக்க நீங்கள் அனுமதிக்கலாமா?" என்று கேட்கின்றோம். எனது பதிலானது சில அரசியல்வாதிகளின் பதிலைப் போல் ஒலிக்கலாம் - ஏனென்றால் "ஆம்" மற்றும் "இல்லை" என்பதே எனது பதில் ஆகும். நான் எதை அர்த்தப்படுத்துகின்றேன் என்பதைப் புரிந்து கொள்வதற்காகவாவது நீங்கள் நான் கூறுவதைக் கேட்பீர்கள் என்று நம்புகின்றேன். முதலாவது நாம் "இல்லை" என்ற பதிலுடன் தொடங்குவோம்.

## "இல்லை": மத சம்பந்த விஷயங்களில் மனச்சாட்சி மட்டுமே போதுமான வழிகாட்டியாய் இருப்பதில்லை

மனச்சாட்சியானது மத சம்பந்த விஷயத்தில் பாதுகாப்பான வழி காட்டியல்ல என்பதை வேதாகமம் தெளிவாக்குகின்றது. பவுலின் உதாரணத்தைக் கவனியுங்கள். பவுல் எப்பொழுதுமே தம்முடைய மனச்சாட்சியின்படியாகவே வாழ்ந்து வந்தார். யூத ஆலோசனைச் சங்கத்தாரிடம் அவர், "சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான்

நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன்" (அப். 23:1ஆ) என்று கூறினார். அகிரிப்பா அரசரிடம் அவர், "முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன்" (26:9) என்று கூறினார். தீமோத்தேயுவுக்கு எழுதும் போது அவர், "நான் ... சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை ..." (2 தீமோ. 1:4) என்று கூறினார்.

பவுலின் மனச்சாட்சியானது அவரது செயல்பாடுகளை எப்பொழுதும் அங்கீகரித்து வந்திருந்தாலும், அவர் கிறிஸ்தவ ராவதற்கு முன்பு தேவனுக்குப் பிரியமில்லாத பல விஷயங்களை - இயேசுவை மறுதலித்தல், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துதல் மற்றும் ஒன்றுமறியாத ஆண்கள் மற்றும் பெண்களைக் கொலை செய்தல் உட்படப் பல விஷயங்களைச் - செய்தார். இதை அகிரிப்பா அரசரிடம் அவர் விளக்கினார்:

> ... நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெப ஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதுஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்க வெறி கொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன் (அப். 26:10, 11).

தீமோத்தேயுவினிடம் அவர், "பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் ... அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோ. 1:15) என்று கூறினார்.

1 கொரிந்தியர் 4:4ல் பவுல், "என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே" என்று கூறினார். "யாதொரு குற்றத்தையும் அறியேன்" (ஆங்கிலத்தில் "I am conscious" என்றுள்ளது) என்ற சொற்றொடரானது கிரேக்க மொழியில் "மனச்சாட்சி" என்ற வார்த்தையின் வினைவடிவத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. உண்மையில் பவுல் இவ்விடத்தில் "என் மனச் சாட்சியானது என்னைக் கண்டனம் செய்யாதிருந்தாலும்

*அதனால் மட்டும் நான் செய்தது சரியென்று அர்த்தமாகி விடாது; நான் சரியானவனா அல்லவா என்பதைத் தேவன் மட்டுமே முடிவு செய்ய இயலும்" என்றே கூறினார்.*

*மனச்சாட்சியானது மத விஷயத்தில் ஒரு பாதுகாப்பான வழிக்காட்டியல்ல என்பதற்குப் பல ஆதாரங்களை - வேதாகமத்தில் இருந்தும், ஒவ்வொரு மனிதரின் அனுபவத்தில் இருந்தும் - காட்ட முடியும். வேதாகமத்தில் பல சமயங்களில் மனிதர்களின் மனச்சாட்சியின்படியான சிந்தனைக் கருத்துக்கள் உண்மையற்றிருக்கையிலும் உண்மை போலத் தோன்றியுள்ளன. உதாரணமாக இரத்தத்தில் தோய்க்கப்பட்ட யோசேப்பின் அங்கியை யாக்கோபு கண்டபொழுது அவர் உண்மையிலேயே தம் மகன் காட்டு மிருகங்களினால் கொல்லப்பட்டதாக நம்பினார் (ஆதி. 37:31-35).*

*மக்கள் நேர்மையான முறையில் தவறுடையவர்களாகவும் உண்மையான முறையில் தவறு செய்பவர்களாகவும் இருக்க முடியும். "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்'' (நீதி. 14:12; 16:25ஐயும் காணவும்). பொய் ஒன்றை விசுவாசித்து இழந்து போகப்படவும் சாத்தியம் உண்டு (2 தெச. 2:10-12). சத்தியம் மட்டுமே ஒருவரை விடுதலையாக்க முடியும் (யோவா. 8:32).*

*வாழ்க்கையின் எந்த வட்டத்திலும் மனச்சாட்சி மட்டுமே போதுமான வழிகாட்டியாய் இருப்பதில்லை[1]: பயணத்தில் அது வழுவாத வழிகாட்டியல்ல; நான் எனது மனச்சாட்சியின்படி சரியான சாலையில் செல்வதாக நம்பியிருக்க, உண்மையில் நான் எனது அடைவிடத்திலிருந்து புறம்பே பயணம் செய்திருக் கின்றேன். ஆரோக்கியத்திலும் அது பாதுகாப்பான வழிகாட்டி யல்ல; மருத்துவர்கள் மனச்சாட்சியின்படியாகத் தங்கள் நோயாளிகளுக்குக் குறிப்பிட்ட வியாதிகளுக்காக சிகிச்சை யளித்திருக்கின்றார்கள், ஆனால் பிற்பாடு அவர்கள் தவறான வியாதிக்கு சிகிச்சை அளித்திருப்பதை அறிகின்றார்கள். வியாபாரத்தில் அது (மனச்சாட்சி) போதுமான வழிகாட்டி யல்ல; புதிய வியாபாரத்தில் பலர் மனச்சாட்சியுடன் ஈடுபடு கின்றார்கள், ஆனால் தங்களுடையவைகள் எல்லாவற்றையும் இழந்து போகின்றார்கள். அது (மனச்சாட்சி) திருமண விஷயத் திலும் போதுமான வழிகாட்டியல்ல; மக்கள் தாங்கள் தேர்ந் தெடுக்கும் துணைவர்களை நன்கு அறிந்திருப்பதாக மனச்*

*சாட்சியின்படி நம்புகின்றார்கள், ஆனால் பிறகு அவர்களை நன்கு அறிந்திருக்கவில்லை என்று காண்கின்றார்கள். (யாக்கோபு கூட ராகேலைத் திருமணம் செய்திருந்ததாக மனச்சாட்சியின்படி நம்பினார், உண்மையிலோ அவர் அவளது சகோதரியாகிய லேயாளைத் திருமணம் செய்திருந்தார்* [*ஆதி. 29:21-30*]*!)*

*மனச்சாட்சி மட்டுமே மத விஷயங்களில் போதுமான வழிக்காட்டியாயிராதது ஏன்? மனச்சாட்சியானது அதற்குக் கிடைக்கும் அறிவினால் வரையறைக்குட்பட்டுள்ளது என்பதே இதற்கு அடிப்படையான காரணம் ஆகும்.*

*ஒவ்வொருவருக்கும் மனச்சாட்சியொன்று கொடுக்கப் பட்டுள்ளதென்று நமது முந்திய பாடத்தில் குறிப்பிட்டோம். சில விஷயங்கள் சரியானவை என்றும் சில விஷயங்கள் தவறானவை என்றும் தனி நபர்கள் தங்களின் உள்ளுணர்வால் அறிகின்றார்கள். மற்றும், குறிப்பிட்ட சில செயல்கள் சரியானவை என்றும் குறிப்பிட்ட சில செயல்கள் தவறானவை என்றும் பெரும்பாலான மக்கள் அறிந்து கொள்கின்றார்கள். (முன்பே நான், ஹிட்லர் யூதர்களை நடத்திய விதமானது பலரால் கண்டனம் செய்யப்பட்டதென்று குறிப்பிட்டேன்.)*

*இருந்தாலும், இப்படிப்பட்ட அடிப்படையான விஷயங் களுக்கப்பால், ஒருவருக்குப் போதிக்கப்பட்டுள்ளதன் அடிப் படையில் அவரது மனச்சாட்சியானது சரி அல்லது தவறு என்று கருதுகின்றது. பலர் விக்கிரகங்களை ஆராதிப்பவர்களாய், பலதார திருமணம் செய்பவர்களாய் அல்லது அடிமைகளை வைத்திருப்பவர்களாய் இருக்கின்றார்கள்; ஆனால் அவர்கள் பெற்றுள்ள போதனை முறைமையினால் அவர்களின் மனச்சாட்சியானது அப்படிப்பட்ட விஷயங்களைக் கண்டனம் செய்வதில்லை. மாறுபட்ட கலாச்சாரப் பின்னணியுடை யவர்கள் சந்திக்கும் பொழுது மனச்சாட்சியின் முரண்பாடு ஏற்படுகின்றது. பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவைத் தங்கள் பேரரசின் ஒரு பகுதியாக எடுத்துக் கொண்ட பொழுது இங்கிருந்த நீண்ட கால நடைமுறை வழக்கங்களில் சில ஒழிக்கப்பட வேண்டும் என்று நம்பினார்கள். இறந்துபோன மனிதரின் விதவை மனைவியை அவருடைய பிணத்துடன் வைத்து எரிப்பதும் அவைகளில் ஒரு வழக்கம் ஆகும். அந்த நடைமுறையைத் தவிர்ப்பதற்கு பிரிட்டிஷார் ஒரு சட்டத்தை*

இயற்றினார்கள். அப்பொழுது இந்தியாவில் இருந்த மதத் தலைவர்களில் ஒருவர், பிரிட்டிஷ் அதிகாரி ஒருவரிடத்தில் வந்து, "விதவையானவள் எரிக்கப்பட வேண்டும் என்றே எங்கள் மனச்சாட்சியானது எங்களுக்குக் கூறுகின்றது" என்று மறுத்துரைத்தார். அதற்கு அந்த அதிகாரி, "நீங்கள் அப்படிச் செய்தால் நாங்கள் உங்களைத் தூக்கில் இட வேண்டும் என்று எங்கள் மனச்சாட்சி எங்களுக்குக் கூறுகின்றது!" என்று பதில் கொடுத்தார்.

முந்திய பாடத்தில் மனச்சாட்சியை நான் ஒரு நீதிபதி, சாட்சி, வழக்குரைஞர் மற்றும் தண்டனை கொடுப்பவர் ஆகிய யாவரும் இணைந்த ஒன்றை ஒப்பிட்டேன். இருப்பினும் சட்டத்தை ஏற்படுத்துவதென்பது நீதிபதி, சாட்சி, வழக்குரைஞர் அல்லது தண்டனை கொடுப்பவர் ஆகியோரின் பணியல்ல. மாறாக, சட்டத்தை அமுல் படுத்துவதே அவர்களின் நோக்கமாய் இருக்கின்றது. அது போலவே மனச்சாட்சி என்பது சட்டத்தை அமுல்படுத்தும், நிறை வேற்றும் அங்கமாக மட்டுமே உள்ளது, அது சட்டமியற்றும் அங்கமாய் இருப்பதில்லை. அது (மனச்சாட்சி) தனக்குக் கிடைக்கும் ஆவிக்குரிய மற்றும் ஒழுக்கவியல் சட்டங்களை அமுல்படுத்த மட்டுமே முடியும்.

"பலமான" மற்றும் "பலவீனமான" மனச்சாட்சிகள் பற்றிய விளக்கங்கள் 1 கொரிந்தியர் 8 முதல் 10 வரையிலும் மற்றும் ரோமர் 14 மற்றும் 15லும் உள்ளதைக் கவனியுங்கள். விக்கிரகங் களுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்ணுதல் பற்றிய சரியான அறிவைப் பெற்றிருந்த நபர் "பலமான" மனச்சாட்சியை உடையவராய் இருந்தார்:

> விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் *அறிந்திருக்கிறோம்* (1 கொரி. 8:4).

> எப்படியெனில், *அறிவுள்ளவனாகிய* உன்னை விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனா யிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்குத் துணிவு கொள்ளு மல்லவா? பலவீனமுள்ள சகோதரன் உன் *அறிவினிமித்தம்* கெட்டுப் போகலாமா? அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே

*(1 கொரி. 8:10, 11).*

*இதற்கு மறுபுறத்தில், ‘‘பலவீனமான’’ மனச்சாட்சியுடைய வர்கள் (ரோமர் 15:1) அந்த அறிவைப் பெற்றிருக்கவில்லை: ‘‘ஆகிலும், இந்த அறிவு எல்லாரிடத்திலும் இல்லை. சிலர் இன்றைய வரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி, விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார் கள்; அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகின்றது” (1 கொரி. 8:7).[2]*

*“மனச்சாட்சியானது ஒருவர் அறிந்துள்ள மிக உயர்தரமான அறிவுடன் தன்னை இணைத்துக் கொள்கின்றது” என்று ஒருவர் கூறியிருக்கின்றார். இங்கு ‘‘அறிதல்’’ என்ற வார்த்தையே செயல்படும் வார்த்தையாக இருக்கின்றது. பக்குவப்பட்ட அறிவு (அதாவது வசனத்தின் அறிவு) என்பது ஒருவரை நன்மை தீமையின்னதென்று பகுத்துணரச் செய்கின்றது (எபி. 5:13, 14).*

*ஆகையால், ‘‘எனது மனச்சாட்சி எதைச் சரியென்று கூறுகிறது?” என்பதல்ல, ஆனால் “தேவனுடைய வசனமானது எதைச் சரியென்று கூறுகிறது?” என்பதே மிகவும் முக்கியமான கேள்வியாய் இருக்கின்றது. ‘‘தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்’’ (2 கொரி. 10:18) என்று நாம் வாசிக்கின்றோம்.*

*‘‘மனச்சாட்சியானது பாதுகாப்பாக வழி நடத்தப்படும் வரைக்கும், அது பாதுகாப்பானதொரு வழிகாட்டியாயிருக் கின்றது’’ என்பது ஞானமுள்ள கூற்றாகும். அதாவது, மனச் சாட்சியானது ‘‘வசனத்தின் உபதேசங்களினால்/போதனை களினால் பாதுகாப்பாக வழி நடத்தப்படும்போது.’’ மக்கள் குழந்தை ‘‘ஞானஸ்நானத்தை’’ நடைமுறைப்படுத்தும் போதோ, வாரத்தின் முதல் நாள் தவிர மற்ற நாட்களில் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் பொழுதோ, அல்லது ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன்படுத்தும் பொழுதோ அவர்களை நாம் காணும்பொழுது, ‘‘அம்மக்கள் மனச்சாட்சியுடைவர்களாய் இருக்கின்றார்களா?’’ என்பது கேள்வியல்ல. மாறாக, ‘‘இவைகளைப் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன?” என்பதே கேள்வியாயிருக்க வேண்டும்.*

*இவ்விதமாய், மனச்சாட்சியானது தனக்குக் கிடைக்கும் அறிவினால் வரையறைக்குட்படுத்தப்படுவதால், மத ரீதியாக*

அது போதுமானதொரு வழிகாட்டியாய் இருப்பதில்லை. நாம் ஏன் நம்மை எப்பொழுதுமே சரியான வழியில் நடத்திச் செல்ல மனச்சாட்சியைச் சார்ந்திருக்கக் கூடாது என்பதற்கு ஒரு துணைக் காரணமும் உள்ளது; சிலர் தங்கள் மனச்சாட்சியானது எந்த விஷயத்திலும் பாதுகாப்பான வழிகாட்டியாய் இராத அளவுக்கு அதைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். மனச்சாட்சியானது பலமாய் நிலைத்திருப்பதற்கு அது பயிற்று விக்கப்பட வேண்டும் (அப். 24:16).

மக்கள் மனச்சாட்சியைக் கண்டுகொள்ளாமல் விடும் போது, அது அசுத்தமடைகின்றது (தீத்து 1:15) மற்றும் சூடுண்ட தாகின்றது (1 தீமோ. 4:1). அசுத்தமான, சூடுண்ட மனச்சாட்சி யானது மிகவும் அழுக்கடைந்து தன் நோக்கத்தை நிறைவேற்றக் கூடாமல்போன ஒரு ஜன்னலுக்கு ஒப்பிடப்படலாம். மத்தேயு 6ல் இயேசு இது போன்றதொரு விளக்கத்தைப் பயன் படுத்தினார்:

> கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமா யிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! (மத். 6:22, 23).

ஆவிக்குரிய விஷயங்களைப் பகுத்தறியும் திறனைக் குறிப்பிடு வதற்கு இயேசு "கண்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். சரீரப் பிரகாரமான கண் குருடாகிப் போனால், சரீரம் முழுவதும் இருளாகின்றது. அது போலவே, நன்மை தீமையைப் பகுத்தறியும் திறன் அழிக்கப்பட்டால், ஒருவர் ஆவிக்குரிய வகையில் இருளில் அழிகின்றார்.

தவறான தகவல்களின் மூலமாகவும் தவறான பயன் பாட்டின் மூலமாகவும் மனச்சாட்சியின் நியாயந்தீர்க்கும் அமைப்பானது தலை கீழாகத் திருப்பி விடப்பட முடியும். "தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவிக்கும்'' (ஏசா. 5:20அ, ஆ) மக்களைப் பற்றி ஏசாயா பேசினார். ''அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே" (பிலி. 3:19இ) என்று பவுல் அவர்களைப் பற்றி

எழுதினார்.

மனச்சாட்சியைத் தவறாகப் பயன்படுத்துதலின் குறிப்புகள் "உங்கள் மனச்சாட்சியை உங்கள் வழிகாட்டியாய் இருக்க நீங்கள் அனுமதிக்கலாமா?" என்ற கேள்விக்கான இரண்டாவது பதிலின் தேவையை விளக்கப்படுத்துகின்றன.

## "ஆம்": மனச்சாட்சி கட்டளையிடுவதை - விசேஷமாக, நியாயந்தீர்க்கும் விஷயங்களில் அதன் கட்டளைகளை - நாம் புறக்கணிக்கக் கூடாது

மத சம்பந்த விஷயங்களில் மனச்சாட்சி மட்டுமே பாதுகாப்பானதொரு வழிகாட்டியாயிருப்பதில்லை என்பதைக் கவனித்திருக்கும் நாம், மனச்சாட்சியானது முக்கியத்துவமற்றது என்ற முடிவுக்கு வர முடியும்; ஆனால் உண்மையை விட்டு வெகு தூரம் செல்லும் வேறு எதுவுமே இல்லை. மனச்சாட்சியை நாம் மீறும்பொழுது, பாவம் செய்கின்றோம் என்று பவுல் தெளிவாகக் கூறினார்.

> ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும் (ரோமர் 14:14).

> ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே (ரோமர் 14:23).

இவ்விடத்தில் "விசுவாசம்" என்ற வார்த்தையானது தேவனுடைய வசனத்தினால் வருகின்ற விசுவாசத்தைக் குறிப்பதில்லை (ரோமர் 10:17), ஆனால் சரியானது அல்லது தவறானது எது என்ற ஒருவரின் நம்பிக்கையை, ஒருவரது சுயமான மதிப்பீட்டின் அமைப்பைக் குறிக்கின்றது. ஒருவர் தாம் எதை சரியானது அல்லது தவறானது என்று நம்புகின்றாரோ, அந்த நம்பிக்கைக்கு முரண்பாடாகச் செயல்பட்டால் (வேறு

வார்த்தைகளில் சொல்வதென்றால், அவர் தம் மனச்சாட்சியை மீறி நடந்தால்) அவர் பாவம் செய்து ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகின்றார் என்று பவுல் கூறுகின்றார். இவ்வசனப் பகுதியைக் கவனமாக வாசியுங்கள்: ஒரு குறிப்பிட்ட செயல் தவறானது என்று நான் நம்பினால், அது மற்றவர்களுக்கும் தவறானதாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை, ஆனால் அது என்னைப் பொறுத்த வரையிலும் தானாகவே தவறாகிவிடுகின்றது.

மனச்சாட்சியை மீறுவது என்பது ஏன் பாவமுள்ளதாயிருக்கின்றது? ஏனென்றால் ஒருவர் தம்முடைய மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயல்படும் ஒவ்வொரு முறையும் மனச்சாட்சியைக் குறைவான செயல் திறனுள்ளதாக்குகின்றார். அவர், தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு பாதுகாவலை அழிக்கின்றார். நமது முந்திய பாடத்தில் நான் மனச்சாட்சியை நரம்பு மண்டலத்திற்கு ஒப்பிட்டேன். நெருப்பிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்ற எனது நரம்பு மண்டலத்தில் எச்சரிக்கையை நான் புறக்கணித்தால், அது வெகு விரைவில் எனது நரம்பு மண்டலத்தை (அத்தோடு கூட என்னையும்) அழித்துவிடும்!

ஒரு இளம்பெண், மனச்சாட்சி என்பதை கூரான முனைகளுடன் உள்ள சூழலும் சக்கரம் ஒன்றிற்கு ஒப்பிட்டுக் கூறினாள். “செய்யக் கூடாதவற்றை நாம் செய்யும்போது, கூரான முனைகள் நம்மைக் குத்திப் புண்படுத்துகின்றன!” என்று அவள் கூறினாள். பிறகு அவள், “ஆனால், செய்யக் கூடாதவைகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், கூர்மையான முனைகள் மழுங்கிப் போய்விடுகின்றன, பிறகு அவைகள் நம்மை அவ்வளவாகப் புண்படுத்தாது” என்றும் கூடச் சொன்னாள். இத்துடன் நாம் பின்வருவதையும் சேர்த்துக் கொள்ள முடியும்: “நாம் செய்யக்கூடாதவைகளை இன்னும் தீவிரமாகச் செய்து கொண்டேயிருந்தால், கூர்மையான முனைகள் முற்றிலுமாக மழுங்கிப் போய், பிறகு அவைகள் நம்மைப் புண்படுத்துவதே இல்லை என்ற நிலை வந்து சேரும்!”

மனச்சாட்சியைப் புறக்கணித்தலின் அபாயம் பற்றிய கதையொன்றை நான் ஒரு முறை படித்தேன். மணியுடன் இணைக்கப்பட்டிருந்த நீரில் மிதக்கும் சாதனம் ஒன்று ஸ்காட்லாந்து நாட்டின் மிக மோசமான கடற்பகுதி ஒன்றில்

நிறுவப்பட்டிருந்தது. கப்பற் தலைவன் ஒருவன் அப்பகுதியில் வாழ்ந்த மக்களின்மேல் சினம் கொண்டான். ஒரு நாள் மதுபானம் பண்ணி, சினம் மிகுந்திருந்த அவன், மிதக்கும் சாதனத்தில் இருந்த அம்மணியைத் துண்டித்தெறிந்து அதன் மூலம் அவர்கள்மேல் பழி தீர்த்துக் கொண்டான். பின்னாளில், அந்தத் தலைவனது கப்பல் கடற்கரையிலிருந்து சென்றபோது புயலில் அகப்பட்டுக் கொண்டது. அவன், தன் கப்பலைப் பாதுகாப்புடன் வழி நடத்த மணியோசை கேட்குமா என்று கவனித்தான், ஆனால் அது வீணாயிற்று. அவனது மதியீனத் தினால் அவனும் கப்பலில் இருந்த அனைவரும் மூழ்கி அழிந் தார்கள். இக்கதையானது பின்வரும் நீதி போதனையுடன் முடிந்தது: ஒரு மனிதன் தன் மனச்சாட்சியை மூடி மறைத்துக் கொண்டேயிருந்தால், அவனுக்கு அது தேவைப்படும் நேரத்தில் அது அங்கிருக்காது.

பவுல், 1 தீமோத்தேயு 1:19ல் மாறுபட்டதொரு கடல்துறை விளக்கத்தைப் பயன்படுத்தினார்: "இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளி விட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத் தினார்கள்." தள்ளிவிடப்பட்ட மனச்சாட்சியை, துல்லியமாய் வேலை செய்யும் திசைகாட்டும் கருவியில்லாததினால் சேதம் அடைந்த ஒரு கப்பலுக்கு ஒப்பிட முடியும்.

மறுபடியும் மறுபடியுமாகப் புறக்கணிக்கப்படும் மனச் சாட்சிக்கு என்ன நடக்கின்றதென்பதை நாம் புரிந்து கொள்ள உதவியாக வேதாகமம் விளக்கமான சொற்றொடர்களைப் பயன்படுத்துகின்றது. புறக்கணிக்கப்பட்ட மனச்சாட்சியானது சூடுண்ட நரம்பு மண்டலம் போல் செயல் திறனை இழக்கின் றது என்று நாம் கவனித்தோம் (1 தீமோ. 4:1). இருப்பினும், மத்தேயு 6:22, 23ல் இயேசுவால் பயன்படுத்தப்பட்ட விளக்கம் தான் என்னை மிகவும் கவர்ந்ததாக உள்ளது. அதில் அவர், கண்கள் இருளடைவதைப் பற்றிப் பேசினார். ஒவ்வொரு முறையும் பாவம் செய்கையில் நமது கண் பார்வையைச் சிறிது இழப்போம் என்று நாம் அறிந்தால் எப்படியிருக்கும்? இது நம்மில் பலரை பாவம் செய்யாதிருக்கத் தூண்டுமல்லவா? நாம் நமது மனச்சாட்சியை மீறும்பொழுது நமது சரீரப் பிரகாரமான பார்வையை இழக்காதிருந்தாலும், ஆவிக்குரிய நமது பார்வையை இழப்போம் என்று அறியும்படியே இயேசு இவ்விளக்கத்தைக் கூறினார். இது நம்மைப் பாவம் செய்வ

திலிருந்து பின்னடையச் செய்வதில் பலமுள்ள ஒரு கருத்தா யிருக்கின்றது.

மனச்சாட்சியை மீறி, அதை வாயடைக்கச் செய்த ஆண்கள் மற்றும் பெண்களைப் பற்றி எண்ணற்ற விளக்கங்கள் வேதாகமத்தில் அடங்கியுள்ளன. தமது அரசாட்சியை ஏராள மான வாக்குறுதிகளோடு தொடங்கிய சவுல் அரசர், பிற்பாடு அதிகாரத்தின் சோதனைகளுக்கு அடிபணிந்து விட்டார் என்று நான் நினைக்கின்றேன். முடிவில் தேவன் தம்முடைய ஆவியை அவரிடத்திலிருந்து எடுத்துப் போட்டுவிடுமளவுக்கு அவருடைய இருதயம் அதிக கடினமடைந்து விட்டது (1 சாமு. 16:14அ).

சவுலுக்கு அடுத்து வந்த தாவீது மிக வலுவானதொரு உதாரணமாய் இருந்தார். சாதாரணமாகவே இளகிய மனச் சாட்சியுடைய மனிதர் பாவத்திற்குமேல் பாவமாகக் குவித்து, தொடர்ந்து பல வாரங்களுக்குத் தம் மனச்சாட்சியைத் திணற வைக்கின்றார். அப்படிப்பட்டவர் தமது மனச்சாட்சியை எழுப்பிவிட நண்பர் ஒருவரைப் பெற்றிருந்திரா விட்டால் (2 சாமு. 12:1-14) அவர் என்றென்றுமே அழிவை அடைபவ ராய்ப் போயிருந்திருக்கக் கூடும்.

ஒருவருடைய மனச்சாட்சியானது தவறான தகவல்களைப் பெற்றிருந்தால், அதற்கு மறுபடியும் கல்வியளிப்பது அவசிய மாகின்றது. அதே வேளையில் - அதற்கு மறுபடியும் கல்வி யளிக்கும் வரையில் - அதன் கட்டளைகளை ஒருவர் புறக் கணித்து விடக்கூடாது. இதை விளக்கப்படுத்துவதற்கு, தம் வாழ்வு முழுவதிலும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மாமிசம் உண்பதைத் தேவன் விரும்புவதில்லை என்று போதிக்கப் பட்டிருக்கும் ஒரு மனிதரைக் கற்பனை செய்து கொள்வோம். ஒரு மனிதர் தாம் விரும்பினால் மாமிசத்தை உண்பதில் தவறேதும் இல்லை (1 தீமோ. 4:1-5) என்று வேதாகமம் போதிக் கின்றது. இருந்தாலும், அந்தத் தனி நபர் வேதாகம ரீதியான சத்தியத்தை கற்றுக் கொள்ளும் வரையிலும், அவர் கடந்த காலத்தில் செய்தது போலவே மாமிசம் உண்பதைத் தொடர்ந்து விலக்கி வைத்திருக்க வேண்டும். இந்தக் கொள்கையை, நாம் பாதுகாப்பற்றது என்று நினைக்கும் ஒரு பாலத்தைக் கடந்து செல்லும் செயலுடன் ஒப்பிடலாம். அந்தப் பாலமானது பாதுகாப்பானதல்ல என்று நாம் நினைக்கும் வரையிலும் நாம்

அதை விட்டு விலகியிருக்க வேண்டும். கடைசியாக, அந்தப் பாலமானது நமது எடையைத் தாங்க முடியும் என்று நாம் ஏற்றுக் கொள்ளும் பொழுது, - அதற்கு முன் அல்ல அதற்கு பின் - நாம் அதைக் கடந்து செல்ல முடியும்.

மனச்சாட்சிக்கு மறுகல்வியளிக்கும் செயல்பாடு தொடர்ந்து நடைபெறும் ஒன்று ஆகும். இதை நாம் செய்வது எப்படி? முதலாவது, நாம் வேதாகமத்தை ஊக்கத்துடன் ஒழுங் காகப் படிக்க வேண்டும், நமது வாழ்விற்கான தேவனுடைய சித்தத்தைப் பற்றிய சிறந்த புரிந்து கொள்ளுதலைப் பெற நாம் நிலையாக முயற்சி செய்ய வேண்டும். இரண்டாவது, நமது உறுதிப்பாடுகளை தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் பரிசோதனை செய்ய பயமற்ற வகையில் திறந்த மனதுள்ளவர் களாயிருக்க வேண்டும்.

அதே வேளையில், சில நீண்ட நாள் உறுதிப்பாடுகள் தவறானவையென்று வேதவசனங்களின்படியாக நாம் ஏற்றுக் கொள்ளும் வரையிலும், நமது மனச்சாட்சி கூறுவதைத்தான் நாம் செய்ய வேண்டும். குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியாளரான மார்ட்டின் லுத்தர், விசாரணையில் நிறுத்தப்பட்ட போது பின்வரும் தலைசிறந்த கூற்றைக் கூறினார்:

> வேதவசனம் மற்றும் தெளிவான காரணம் இவற்றினால் நான் நம்பும்படியாக ஆகாதவரை போப்புகள் மற்றும் சங்கங்களின் அதிகாரமுடைமையை நான் ஏற்றுக்கொள்ளுவதில்லை, ஏனென்றால் அவையிரண்டுமே ஒன்றுக்கொன்று முரண் படுகின்றன - எனது மனச்சாட்சியோ தேவனுடைய வசனத் திற்கு அடிமையாய் இருக்கின்றது. நான் கூறிய எதையும் என்னால் திரும்பப் பெற முடியாது, அவ்வாறு செய்யவும் மாட்டேன், ஏனென்றால் மனச்சாட்சிக்கு எதிராகச் செல்வ தென்பது சரியானதல்ல, பாதுகாப்பானதும் அல்ல. தேவனே எனக்கு உதவி செய்யும். ஆமென். (Roland H. Bainton, *Here I Stand: A Life of Martin Luther*).

## முடிவுரை

“உங்கள் மனச்சாட்சியை உங்கள் வழிகாட்டியாயிருக்க நீங்கள் அனுமதிக்கலாமா?” என்ற கேள்விக்கு குழப்பமாய்க் காணப்படும் ‘‘ஆம்/இல்லை’’ என்ற எனது பதிலை இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நான்

நம்புகின்றேன். மத விஷயங்களில் நமது மனச்சாட்சி மட்டுமே நமது வழிகாட்டியாய் இருப்பது கூடாது. இதற்கு மறுபுறத்தில், தேவனால் நிறுவப்பட்ட இந்தப் பாதுகாப்பை மங்கச் செய்து விடாதபடிக்கு நமது மனச்சாட்சியின் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். நமது மனச்சாட்சிக்குக் கல்வியளிக்கும் செயல்பாட்டிலும் சரியானது எது மற்றும் தவறானது எது என்பது பற்றிய நமது கருத்துக்களைப் பண்படுத்துவதிலும் நாம் தொடர்ந்து ஈடுபட வேண்டும். (இவ்விடத்தில் இப்பாடத்தின் முக்கிய கருத்துக்களை மறுகண்ணோட்டமிட அதிக நேரம் செலவழிக்கப்படலாம்.)

தேவன் விரும்பியபடியாக மனச்சாட்சியானது இருக்கும் பொழுது அது செயல் திறன் உள்ளதாக, ஒளியூட்டப்பட்டதாக மற்றும் பயிற்சி பெற்றதாக இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது முதல் பாடத்தில், செயல்திறன் உள்ள மனச்சாட்சியைப் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் வலியுறுத்தினோம்; இப்பாடத்தில், ஒளியூட்டப்பட்ட மனச்சாட்சியைப் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் வலியுறுத்தினோம்; அடுத்த பாடத்தில், பயிற்சி பெற்ற மனச்சாட்சியைப் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை நாம் பரிசீலனை செய்வோம்.

இதை நாம் முடிக்கையில், 1 பேதுரு 3:21ஐ நாம் கவனிப்போம். அவ்வசனப் பகுதியில் பேதுரு, “ஞானஸ்நானமானது ... இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது” என்று வலியுறுத்தினார். இருந்தாலும், அவர் ஞானஸ்நானமானது “மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது” என்றும் சுட்டிக் காட்டினார். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், குற்றமுள்ள மனச்சாட்சியை இனியும் பெறாதிருப்பது என்பது ஞானஸ்நானம் பெறுவதற்கான ஒரு நோக்கமாகும்.

நீங்கள் இயேசுவில் விசுவாசம் (நம்பிக்கை) கொண்டு (யோவான் 3:16), உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி (அப். 17:30), உங்கள் இருதயத்தில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு (ரோமர் 10:9, 10), உங்கள் பாவமன்னிப்புக்காக (தண்ணீரில் முழுகி) ஞானஸ்நானம் பெற்று (அப். 2:38), மரண பரியந்தம் உண்மையாயிருக்க வேண்டும் என்று

*(வெளி. 2:10) என்று வேதாகமம்/தேவனுடைய வசனம் கூறுகின்றது. உங்கள் மனச்சாட்சியானது ஒளியூட்டப் பட்டிருந்தால், இந்த போதனைகள் யாவும் உண்மை என்று அது ஒப்புக்கொள்ளும். உங்கள் மனச்சாட்சி செயலூக்கம் கொண்டிருந்தால், அது நீங்கள் இவைகளைச் செய்ய வேண்டும் என்று கூறும். இப்பொழுது, நீங்கள் செய்ய வேண்டியது அவசியம் என்று அறிந்துள்ளவைகளைச் செய்யும்படி உங்கள் மனச்சாட்சியைப் பயிற்றுவிக்க/பயிற்சியளிக்க வேண்டியது அவசியமாகும். உங்கள் மனச்சாட்சியானது - இப்பொழுதே - தேவனுக்கு "ஆம்" என்று பதில் கூறட்டும்!*

---

*குறிப்புகள்*

*[1]இவ்விளக்கங்கள் A. G. Hobbs, Jr., அவர்களால் அவருடைய கைப் பிரதியான "மனச்சாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியா?" என்ற கைப் பிரதியில் கருத்துக் களாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவைகள் வெளிப்படையாகவே பொதுவான விளக்கங்களாய் உள்ளன. தவறான செயல்பாடுகள் பற்றிய மனச்சாட்சியின் செயல்பாடுகளுக்கான சொந்த எடுத்தக்காட்டுகளைக் கூடுதலாய்க் கூறுவதன் மூலம் இவைகளை மேம்படுத்த முடியும். [2]"பலமான" என்றால் எல்லா விஷயங்களைப் பற்றியும் அறிவுடன் இருத்தல் என்று அர்த்தமாகாது, ஆனால் கவனத்தில் கொண்டுள்ள விஷயத்தில் நீதியுடன் செயல்படுதல் என்று அர்த்தப்படும். ஒரு விஷயத்தில் "பலமான (அறிவுள்ள) மனச்சாட்சியையும்", இன்னொரு விஷயத்தில் ''பலவீனமான (அறியாமையுள்ள) மனச்சாட்சியையும்'' கொண்டிருப்பது சாத்தியமேயாகும். இதனால்தான் ரோமர் 14; 15ல் இரண்டு தலைப்புகள் விளக்கம் கூறப் பயன்படுத்தப்பட்டுள்ளன: யூதக் கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கும் விஷயத்தில் பலமான மனச்சாட்சி உள்ளவர் களாகவும், விசேஷித்த யூதப் பண்டிகைகளை ஆசரிப்பதில் பலவீனமான மனச்சாட்சி உள்ளவர்களாகவும் இருந்தார்கள். இதற்கு மறுபுறத்தில், புறஜாதிக் கிறிஸ்தவர்கள், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கும் விஷயத்தில் பலவீனமான மனச்சாட்சி உள்ளவர்களாகவும், யூதர்களின் விசேஷித்த பண்டிகைகளை ஆசரிப்பதில் பலத்த மனச்சாட்சி உள்ளவர்களாகவும் இருந்தார்கள்.*